# பத்திரிகைச் செய்தி வெளியீடு
# 2016ம் ஆண்டுக்கான காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் செயலாற்றுகை


**காப்புறுதிக் கட்டுப்பண வருமானம் மற்றும் வளர்ச்சி வீதம்**

இலங்கை காப்புறுதி கைத்தொழிற்துறை 2016ம் ஆண்டும் அதன் வளர்ச்சியைத் தொடர்ந்தது. காப்புறுதி கைத்தொழிற்துறை நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் எனும் இரு துறைகளிலும் மொத்தக் காப்புறுதிக் தவணைக் கட்டண வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது. 2016ம் ஆண்டு இரு துறைகளும் மொத்த தவணைக் கட்டண வருமானமாக ரூபா 142,969 மில்லியனை பெற்றுக்கொண்டுள்ளதுடன், இது 2015ம் ஆண்டு பெற்றுக்கொண்ட ரூபா 122,692 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 16.27% வீத வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்றது.

நீண்ட கால காப்புறுதித்துறை 2016ம் ஆண்டு மொத்த காப்புறுதித் தவணைக்கட்டண வருமானமாக ரூபா 63,495 மில்லியனைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன், இது 2015ம் ஆண்டு பெற்றுக்கொண்ட ரூபா 53,691 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 18.26% வீத வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இந்தக் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு ஆயுள் காப்புறுதி மீதான விழிப்புணர்வு அதிகரிக்கப்பட்டமை, ஓய்வூதியத் தீர்வுகள் மற்றும் முதலீட்டு பண்டங்கள் போன்ற வாடிக்கையாளர்களின் மாறும் தேவைகளின் அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய ஆயுள் காப்புறுதி வகைகள், மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் சேவை போன்ற காரணிகள் பங்களிப்பு செய்துள்ளன.

பொதுக் காப்புறுதி வியாபாரம் 2016ம் ஆண்டு மொத்தக் காப்புறுதித் தவணைக் கட்டண வருமானமாக ரூபா 79,474 மில்லியனைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன், இது 2015ம் ஆண்டு பெற்றுக்கொண்ட ரூபா 69,271 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 14.73% வீத வளர்ச்சியைப் பெற்றுள்ளது. தனிப்பட்ட சந்தைகளில் கவனம் செலுத்துதல், பொதுக் காப்புறுதி அளிப்பவர்கள் புத்தாக்க பொதுக் காப்புறுதி வகைகளை அறிமுகப்படுத்தல், தொழில்முயற்சி இடர் முகாமைத்துவ உபாயமார்க்கத்தை அறிமுகப்படுத்தல், இடர் தேர்வு மற்றும் விலையிடல் மீதான கவனக்குவிப்பு போன்ற காரணிகளைக் கையாண்டதன் மூலம் பொதுக் காப்புறுதிச் சந்தையில் காணப்பட்ட பலமான போட்டித்தன்மையின் இடையில் அவர்களுடைய காப்புறுதிக் கட்டண வருமானத்தை அதிகரிப்பதற்கு இயலுமானதாக இருந்தது.

பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் கட்டாய மீள்காப்புறுதி விட்டுக்கொடுத்தலில் இருந்து 2016ம் ஆண்டு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் பெறப்பட்ட மீள்காப்புறுதிக் கட்டண வருமானம் ரூபா 2,357 மில்லியனாக இருந்ததுடன், இது 2015ம் ஆண்டு பெறப்பட்ட மீள்காப்புறுதி தவணைக்கட்டண வருமானமான ரூபா 1,738 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 35.62% வீதம் எனும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கொண்டுள்ளது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மீள்காப்புறுதி தவணைக் கட்டண வருமானமானது 2016ம் ஆண்டு கணிசமான அளவில் அதிகரிப்பதற்கு பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் பரந்த பல்வேறுபட்ட வகுப்புகளில் இருந்து மீள்காப்புறுதி வியாபாரம் ஏற்றுக்கொள்ளப்பட்டமையும் துணைபுரிந்தது.




### காப்புறுதியின் ஊடுறுவல் மற்றும் பரம்பல்

2016ம் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் காப்புறுதித் தவணைக் கட்டணத்தின் வீதம் 1.21% ஆக இருந்ததுடன், இது காப்புறுதி ஊடுறுவலைப் பிரதிபலிக்கின்றது. அத்துடன் 2015ம் ஆண்டு 1.12% வீதமாக இருந்த ஊடுறுவலுடன் ஒப்பிடுகையில் 2016ம் ஆண்டு அதிகரிப்பைக் காட்டுகின்றதுடன், ஆசியப் பிராந்தியத்தின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்த வளர்ச்சி குறைவாகவே உள்ளது. 2016ம் ஆண்டு நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் ஊடுறுவல் 0.54% வீதமாகவும் (2015: 0.49%) பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் ஊடுறுவல் 0.67% வீதமாகவும் (2015: 0.63%) இருந்ததுடன், இரு வியாபாரங்களும் 2015ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஓர் சிறியளவு வளர்ச்சியைக் காட்டுகின்றது.


காப்புறுதி பரம்பல் மொத்தச் சனத்தொகையில் ஒரு நபருக்கான காப்புறுதித் தவணைக் கட்டண வருமானத்தைப் பிரதிபலிக்கின்றதுடன், இது 2015ம் பதிவுசெய்த ரூபா 5,865 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016ம் ஆண்டு பதிவுசெய்த ரூபா 6,743 வளர்ச்சியைக் காட்டுகின்றதுடன், இந்த 14.97% வீத வளர்ச்சியானது சனத்தொகையில் ஏற்பட்ட குறைந்த வளர்ச்சியுடன் தவணைக் கட்டண வருமானம் அதிகரித்தமை காரணமாக ஏற்பட்டுள்ளது.

### மொத்தச் சொத்துக்கள்

31 டிசம்பர் 2016 அன்று நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதியாளர்கள் மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தேசிய மீள்காப்புறுதியாளர்களை உள்ளடக்கிய காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் மொத்த சொத்துக்கள் (உள்ளகப் பகுதி பரிமாற்றங்களை நீக்கிய பின்னர்) ரூபா 527,228 மில்லியன் ஆகும். இந்த சொத்துக்கள் 31 டிசம்பர் 2015ம் திகதியில் பதிவுசெய்த ரூபா 466,707 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 12.97% வீதம் வளர்ச்சி அடைந்துள்ளது.

31 டிசம்பர் 2016ம் திகதியில் ரூபா 345,675 மில்லியன் (2015 : ரூபா 312,713 மில்லியன்) பெறுமதியான சொத்துக்களை கொண்டுள்ள நீண்ட கால காப்புறுதியாளர்கள் மொத்தக் கைத்தொழிற்துறையின் சொத்துக்களில் பெரும்பான்மையை தன்வசம் கொண்டுள்ளனர். நீண்ட கால காப்புறுதியாளர்கள் 2015ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016ம் ஆண்டு 10.54% வளர்ச்சியை அடைந்துள்ளனர். 31 டிசம்பர் 2016ம் திகதியில் ரூபா 175,745 மில்லியன் (2015 : ரூபா 151,177 மில்லியன்) பெறுமதியான சொத்துக்களை கொண்டுள்ள பொதுக் காப்புறுதியாளர்கள், 2015ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016ம் ஆண்டு 16.25% வளர்ச்சியை அடைந்துள்ளனர்.


31 டிசம்பர் 2016ம் திகதியில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் சொத்துக்களின் பெறுமதி ரூபா 5,915 மில்லியன் ஆவதுடன், 31 டிசம்பர் 2015ம் திகதி காணப்பட்ட ரூபா 3,604 மில்லியன் பெறுமதியான சொத்துக்களுடன் ஒப்பிடுகையில் மீள்காப்புறுதி வியாபாரமானது குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்துள்ளது. மேற்குறிப்பிட்ட அதிகரிப்பு சொத்துக்களில் ஏற்படுவதற்கு, நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி வியாபாரத்தின் காப்புறுதித் தவணைக் கட்டணத்தில் ஏற்பட்ட அதிகரிப்பின் விளைவாக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினதும் காப்புறுதியாளர்களினதும் சொத்துக்களின் அடித்தளத்தின் விரிவுபடுத்தல் காரணமாக அமைந்துள்ளது.




**காப்புறுதிக் கம்பனிகளினால் ஈடுசெய்யப்பட்ட கோரிக்கைகள்**


நீண்ட கால காப்புறுதி வியாபாரம் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் என்பவற்றில் ஈடுபட்டுள்ள காப்புறுதிக் கம்பனிகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோரிக்கைகளின் பெறுமதி ரூபா 63,638 மில்லியன் (2015 : 54,356 மில்லியன்) ஆவதுடன், வருடத்திற்கு வருடம் மொத்தக் கோரிக்கைளின் பெறுமதியில் 17.08% வீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. முதிர்ச்சி மற்றும் மரணக் கொடுப்பனவுகளை உள்ளடக்கி நீண்ட கால காப்புறுதிக் கோரிக்கைகளின் பெறுமதி ரூபா 22,622 மில்லியன் (2015 : ரூபா 20,934 மில்லியன்) ஆகும். மோட்டார், தீ, கடல் மற்றும் ஏனைய காப்புறுதிகளை உள்ளடக்கி பொதுக் காப்புறுதி வியாபாரத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோரிக்கைகளின் பெறுமதி ரூபா 41,015 மில்லியன்

(2015 : ரூபா 33,422 மில்லியன்) ஆகும். 2015ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நீண்ட கால காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி வியாாரத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோரிக்கைகளின் பெறுமதி முறையே 8.07% மற்றும் 22.72% வீதத்தினால் அதிகரித்துள்ளது.




**காப்புறுதிக் கம்பனிகளின் இலாபம் ( வரிக்கு முன்னர்)**

நீண்ட கால காப்புறுதி வியாபாரம் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் எனும் இரண்டு காப்புறுதிக் கம்பனிகளினதும் இலாபம் (வரிக்கு முன்னர்) ரூபா 24,651 மில்லியனாக (2015 : ரூபா 17,489) அதிகரித்துள்ளதுடன், இதன் அபரித வளர்ச்சி 40.95% வீதமாகும். இவ்வருடம் பொதுக் காப்புறுதி வியாபாரம் இலாபமாக ரூபா 13,139 மில்லியனை (2015 : ரூபா 9,078 மில்லியன்) பெற்றுக்கொண்ட போது நீண்ட கால காப்புறுதி வியாபாரம் ரூபா 11,511 மில்லியனை (2015 : ரூபா 8,411 மில்லியன்) இலாபமாகப் பெற்றுக்கொண்டுள்ளது. 2015ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நீண்ட கால காப்புறுதி வியாபாரமும் பொதுக் காப்புறுதி வியாபாரமும் முறையே 23.72% மற்றும் 44.74% வீத வளர்ச்சியைப் பெற்றுக்கொண்டுள்ளன.




### முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் விசாரணைகள்

இலங்கை காப்புறுதி சபையின் பிரதான குறிக்கோளான காப்புறுதி பூட்கையாளர்களைப் பாதுகாத்தல் என்பதற்கமைவாக, ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதிக் கொள்கைகளின் கீழ் காப்புறுதிக் கொள்கைகள் தொடர்பாக எழுந்துள்ள காப்புறுதி பூட்கையாளர்களின் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை சபை மேற்கொள்கின்றது. 2016ம் ஆண்டு சபைக்கு 353 புதிய முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றது. கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் 345 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டது/ முடிவுறுத்தப்பட்டது. 2016ம் ஆண்டு சபையின் தலையீடு காரணமாக தீர்க்கப்பட்ட கோரிக்கைகளின் மொத்தப் பெறுமதி அண்ணளவாக ரூபா 21.5 மில்லியன் ஆகும்.

### காப்புறுதியாளர்கள்

31 டிசம்பர் 2016ம் திகதி செயற்பட்ட இருபத்தியெட்டு (28) காப்புறுதிக் கம்பனிகளில் (காப்புறுதியாளர்கள்), பன்னிரெண்டு (12) கம்பனிகள் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தை மட்டும் மேற்கொள்வதுடன், பதினைந்து (13) கம்பனிகள் பொதுக் காப்புறுதி வியாபாரத்தை மட்டும் மேற்கொள்ளுகின்றன, அதேவேளை இதில் மூன்று (03) கம்பனிகள் இணைந்த கம்பனிகளாகும் (இவை பொது மற்றும் பன்னிரெண்டு கம்பனிகள் நீண்ட கால காப்புறுதி வியாபாரங்கள் எனும் இரண்டினையும் ஒருங்கே மேற்கொள்ளும் வியாபாரங்கள்).

### காப்புறுதித் தரகர்கள்

31 டிசம்பர் 2016 அன்று ஆண்டில், ஐம்பத்தியெட்டு (58) காப்புறுதித் தரகுக் கம்பனிகள் சந்தையில் செயற்பட்டன.

பொது காப்புறுதி வியாபாரச் சந்தையில் இடைத்தரகர்களின் முக்கியத்துவத்தை பொது காப்புறுதி வியாபாரத்தில் இடைத்தரகர்களின் ஊடாக பெற்றுக்கொண்ட கட்டுப்பண வருமானம் காட்டுகின்றது. எனினும், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், நீண்ட கால காப்புறுதி வியாபாரத்திற்கு காப்புறுதித்

தரகர்களின் பங்களிப்பு போதுமானதாக இருக்கவில்லை. பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்பாக காப்புறுதி தரகுக் கம்பனிகள் ரூபா 17,519 மில்லியன் (2015: ரூபா 16,124 மில்லியன்) காப்புறுதிக் கட்டுப்பண வருமானத்தை உழைத்துக்கொண்டதுடன் நீண்ட காலக் காப்புறுதி வியாபாரம் தொடர்பாக இவை ரூபா 263 மில்லியன் (2015: ரூபா 206 மில்லியன்) காப்புறுதிக் கட்டுப்பண வருமானத்தைப் பெற்றுக்கொண்டன. 2016ம் ஆண்டு காப்புறுதித் தரகுக் கம்பனிகள் பொதுக் காப்புறுதி வியாபாரம் மற்றும் நீண்ட கால வியாபாரம் என்பவற்றின் ஊடாக ரூபா 17,782 மில்லியன் வருமானத்தை பெற்றுக்கொண்டதுடன், இதே வியாபாரம் தொடர்பாக கடந்த வருடம் ரூபா 16,330 மில்லியனை உழைத்துக்கொண்டுள்ளது. 2016ம் ஆண்டைக் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8.89% வீத வளர்ச்சியினை காப்புறுதி தரகர் வியாபாரம் வெளிப்படுத்துகின்றது. எனினும் மொத்த தவணைக் கட்டுப்பண வருமானத்திற்கான தரகர் கம்பனிகளின் பங்களிப்பு 13.28% வீதத்திலிருந்து 12.44% வீதமாக குறைந்துள்ளது.

குறிப்பு:

1) 2016 – ஏற்பாடுகளின் இலக்கங்கள்.
2) *சொத்துக்கள*- இடைக்கால கொடுக்கல் வாங்கல்கள் நீக்கப்பட்டது. (அதாவது நீண்ட கால காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதிப் பகுதிகளுக்கிடையிலான பரிமாற்றம்)
3) *இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் சனசவின் ஆயுள் பங்குதாரர்களுக்கு சொந்தமான சொத்துக்கள் பொதுக் காப்புறுதியின் கீழ் அறிக்கையிடப்பட்டுள்ளது.*
4) *கைத்தொழில் புள்ளிவிரங்களின் கணிப்பீடுகளில் இருந்து தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் பயிர் மற்றும் கடன் பாதுகாப்பு நிதியத்தின் வருமானம் மற்றும் சொத்துக்கள் நீக்கப்பட்டுள்ளது..*

இலங்கை காப்புறுதி சபை
11வது மாடி, கிழக்கு கோபுரம்
உலக வர்த்தக மையம்
கொழும்பு 01

| | |
|---|---|
| தொலைபேசி: 011 2396184 - 4 | தொலைநகல்: |
| இணையத்தளம்: www.ibsl.gov.lk | மின்னஞ்சல்: info@ibsl.gov.lk |

14/08/2017